செய்தி வெளியீடு எண். 519 நாள் .21.08.09

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையில் 2009–2010 ஆம் ஆண்டிற்கு பகுதி–2 திட்டத்திற்கு ரூ.5 கோடியே 3 இலட்சத்து 37 ஆயிரம் ஒதுக்கீடு செய்து 30 ஆணைகளை தமிழக அரசு பிறப்பித்துள்ளது.**

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் 23.6.2009 அன்று நடைபெற்றது. மானியத்தில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் 2009–2010 ஆம் ஆண்டிற்கான பகுதி–2 திட்டங்களை செயல்படுத்துவது குறித்து அறிவித்தார்கள்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையில் பகுதி–2 திட்டத்தில் 2009–2010 ஆம் ஆண்டிற்கு ரூ.5 கோடியே 3 இலட்சத்து 37 ஆயிரம் மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிடவும், துறையின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், இத்திட்டங்களை ஓராண்டுக்குள் செயல்படுத்துவதற்கு ஏதுவாக நிதித்துறையின் ஒப்புதல் பெற்று நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் திரு.வி.கே.சுப்புராஜ், இ.ஆ.ப. அவர்கள் ஆணைகளாக வெளியிட்டுள்ளார்கள். அதன் விவரங்கள் வருமாறு:-

**மருத்துவக் கல்வி**

| வ. எண். | விவரம் | ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கோபால்ட் கருவியின் உள்ளீட்டு ஐசோடோப் மாற்றுதல் | 45.00 |
| 2. | சென்னை மருத்துவக் கல்லூரியில் மருந்தாக்கியியல் துறைக்கு கருவிகள் வாங்குதல் | 12.00 |
| 3. | சென்னை மருத்துவக் கல்லூரியில் ஈரல் இயல் துறைக்கான சாதனத்தை வாங்குதல் | 41.19 |
| 4. | திருநெல்வேலி மருத்துவ கல்லூரி மாணவர் விடுதிக்கு சுற்றுச்சுவர் கட்டுதல் | 15.20 |
| 5. | மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் எதிர் சவ்வூடு பரவல் வசதியை ஏற்படுத்துதல் | 3.00 |
| 6. | சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் உள்ள இரத்த நாள அறுவை சிகிச்சை துறைக்கு சாதனம் வாங்குதல் | 16.00 |
| 7. | சென்னை மருத்துவக் கல்லூரி இயக்குநர் அலுவலகப் பயனுக்காக மின்னாக்கி வாங்குதல் | 10.00 |
| 8. | தஞ்சாவூர் இராசா மிராசுதார் அரசு மருத்துவமனையில் உள்ள பல் மருத்துவ அறுவை சிகிச்சைப் பிரிவுக்கான சாதனம் வாங்குதல் | 8.00 |
| 9. | தஞ்சாவூர் இராசா மிராசுதார் அரசு மருத்துவமனையில் உலர் சலவையகம் ஏற்படுத்துதல் | 50.00 |

| | | |
|---|---|---|
| | <u>மருத்துவம் மற்றும் ஊரக சுகாதாரப் பணிகள்</u> | |
| 10. | 6 மாவட்ட சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர்களுக்கு பழைய சீருந்துகளுக்கு பதிலாக புதிய சீருந்துகளை வழங்குதல் | 30.00 |
| 11. | மருத்துவம் மற்றும் ஊரகச் சுகாதாரப் பணிகள் இயக்குநர் அலுவலகத்திற்கு துணை பாகங்களுடன் 10 எண்ணிக்கை லேசர் பிரிண்டர்களை வழங்குதல் | 2.40 |
| 12. | நாமக்கல் அரசு தலைமையிட மருத்துவமனையில் புதிய மருந்து கிடங்கு கட்டுதல் | 50.00 |
| 13. | மருத்துவம் மற்றும் ஊரகச் சுகாதாரப் பணிகள் இயக்ககத்திற்கு அச்சுப்பொறி மற்றும் ஸ்கேனர் கருவியுடன் பல்நோக்குஒளிநகலி வாங்குதல் | 3.00 |
| 14. | சுகாதாரப் பணிகள் துறையின் அனைத்து இணை இயக்குநர்களுக்கும், மருத்துவம் மற்றும் ஊரகச் சுகாதாரப் பணிகள் இயக்குநருக்கும் மடிக்கணினி வழங்குதல் | 10.50 |
| 15. | மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை இணை இயக்குநர் அலுவலகம், இயக்குநரகத்திற்கு நிகரி இயந்திரம் வழங்குதல் | 3.00 |
| | <u>இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி மருத்துவம்</u> | |
| 16. | இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம், இந்திய முறை மருத்துவக் கல்லூரிகள், அறிஞர் அண்ணா இந்திய முறை அரசு மருத்துவமனை மற்றும் அனைத்து மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் அலுவலகங்களுக்கு நிகரி மற்றும் இணைய தள வசதி வழங்குதல் | 4.60 |
| 17. | சென்னை அரசினர் சித்த மருத்துவ கல்லூரி, அரசினர் யுனானி மருத்துவக் கல்லூரு, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை அரசு மருத்துவமனை மற்றும் மதுரை மாவட்டம் திருமங்கலம் அரசினத் ஓமியோபதி மருத்து கல்லூரிகளுக்கு ஒளிநகலிகள் வாங்குதல் | 4.00 |
| 18. | சென்னை அறிஞர் அண்ணா இந்திய முறை அரசு மருத்துவமனை உறைவிட மருத்துவ அலுவலருக்கு குடியிருப்பு கட்டுதல். | 22.00 |
| 19. | இந்திய முறை மருத்துவத்தில், ஒருங்கிணைந்த மருந்தாக்கவியல் மற்றும் செவிலி மருந்துவ சிகிச்சை போன்றவற்றில் பட்டயபாட வகுப்புகளை நடத்துவதற்காக கூடுதல் கட்டடம் கட்டுதல் | 11.00 |
| | <u>பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து</u> | |
| 20. | துணை இயக்குநர்கள், சுகாதார பணிகள் மற்றும் மண்டல பூச்சியியல் குழுக்களுக்கு 20 ஈப்புகள் வாங்குதல். | 100.00 |
| | <u>மருந்துப் பொருள் கட்டுப்பாடு</u> | |
| 21. | மண்டல அலுவலகங்களுக்கு நகல்எடுக்கும் கருவி மற்றும் நிகரி வழங்குதல் | 1.80 |
| 22. | மருந்து கட்டுப்பாடு இயக்குனர் அலுவலகம் சென்னை மற்றும் மண்டல அலுவலக பயன்பாட்டிற்காக மேற்கோள் புத்தகங்கள் வாங்குதல் | 2.50 |
| 23. | மருந்தாய்வு கூடத்தில் உள்ள பழைய தளவாடங்கள், கருவிகளுக்கு பதிலாக புதிய சாதனங்கள்/கருவிகள் வாங்குதல் | 25.00 |

| | | |
|---|---|---|
| | <u>குடும்ப நலன்</u> | |
| 24. | குடும்ப நல இயக்ககத்தில் காலியாக உள்ள அறையை கணினி அறையாக மாற்றி மின் வசதி ஏற்படுத்துதல் | 2.00 |
| 25. | 10 மாவட்ட குடும்ப நலப் பிரிவுகளில் கட்டடம் மற்றும் மின்பணி தொடர்புடைய சிறிய பழுதுபார்ப்பு பணிகளுக்கு வகை செய்தல் | 16.00 |
| | <u>தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்து</u> | |
| 26. | தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறையில் ஒரு வண்ணம் பூசும் சாவடி அமைத்தல் | 10.00 |
| 27. | தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறைக்கு உருளிப்பட்டை சாதனைத்தை வாங்குதல் | 0.80 |
| 28. | தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறைக்கு ஒரு மின்கலச் சுமை சாதனத்தை வாங்குதல் | 0.08 |
| 29. | தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறைக்கு ஒரு மின்கலச் சோதனை கருவி வாங்குதல் | 0.30 |
| 30. | துணை பாகங்கள் மற்றும் அறைகலன்களுடன் 10 கணினிகள் வாங்குதல் | 4.00 |

ஆக மொத்தம் ரூபாய் ஐந்து கோடியே மூன்று இலட்சத்து முப்பத்தேழாயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆணையில் குறிப்பிட்டுள்ள கருவிகள் அரசு ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளுக்குட்பட்டு கொள்முதல் செய்யப்படும். பணிகளும் அவ்வாறே நிறைவேற்றப்படும்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.